KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 05.02.2013

| Date of Council | Decision Number | Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 05.02.2013 | 452 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் ஆடு மாடு அறுக்கும் தொட்டியில் ஆடு ஒன்றுக்கு ரூ.40/- எனவும் மாடு ஒன்றுக்கு ரூ.50/- எனவும் வசூல் செய்திட ஏற்கனவே மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. தற்போது அக்கட்டணத்தை மறு பரிசீலனை செய்து அறுப்பு கட்டணத் தொகையினை மாற்றியமைத்திட மன்றம் தீர்மானக்க.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் ஏற்கனவே அனுமதித்த ஆடு ஒன்றுக்கு ரூ.40/- எனவும் மாடு ஒன்றுக்கு ரூ.50/- எனவும் அனுமதித்த கட்டணத்தை ரத்து செய்து மறு கட்டணம் மன்றம் நிர்ணயம் செய்யலாம். | கடந்த சில ஆண்டுகளாலாக காயல்பட்டணம் நகராட்சிக்கு ஆடு மாடு அறுக்கும் தொட்டி மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருந்ததை கருத்திற் கொண்டு 29.05.2012 அன்று ஆடு மாடு அறுக்கும் தொட்டி ஏலம் விடப்பட்டது. ஏலத்தை எடுத்தவர் சொந்த காரணங்களுக்காக வாபஸ் பெற்றதால் மீண்டும் இரு முறை ஏலம் விடப்பட்டு யாரும் எடுக்கவில்லை. இந்நிலையில் ஆடு ஒன்று அறுக்க கட்டணம் ரூ.40 எனவும் மாடு ஒன்று அறுக்க கட்டணம் ரூ.50 எனவும் நகர்மன்றம் கட்டணம் 20.10.2012-ல் நிர்ணயம் செய்து தீர்மானம்எண்:-311-ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் குறித்து தினத்தந்தி நாளிதழில் 15.01.2013 அன்று விளம்பரம் செய்யப்பட்டது ஆட்சேபனைகள் எதுவும் வராத காரணத்தால் 29.01.2013 அன்று விளம்பரம் செய்யப்பட்டது ஆட்சேபனைகள் ஏதுவும் வராத காரணத்தால் 29.01.2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் 441-ன்படி 01.02.13 முதல் ஆடு ஒன்றுக்கு ரூ.40/- எனவும் மாடு ஒன்றுக்கு ரூ.50/- எனவும் அறுப்புக் கட்டணம் வசூல் செய்ய நகர்மன்றம் முடிவு செய்தது. ஆனால் 01.02.2013 அன்று கறிக்கடை உரிமையாளர்கள் அறுப்பு கட்டணத் தொகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடை அடைப்பு செய்தனர். ஆகவே 05.02.2013 அன்று அவசரக் கூட்டத்தில் ஆடு ஒன்றுக்கு ரூ.20/-எனவும் மாடு ஒன்றுக்கு ரூ.30/- எனவும் அறுப்பு கட்டணம் நிர்ணயம் செய்து 06.02.2013 முதல் வசூல் செய்ய மன்றம் தீர்மானித்து புதிய கட்டணத்தை மாவட்ட அரசு கெசட்டில் வெளியிட மன்றம் தீர்மானிக்கிறது. மாவட்ட அரசு கெசட்டில் புதிய கட்டணத்தை வெளியிட்டபின் ஆடு, மாடு தொட்டி குறித்த அனைத்து விதி முறைகளையும் மன்றம் முடிவு செய்து 01.04.2013 முதல் ஏலம் விட மன்றம் தீர்மானிக்கிறது. |